# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை 2020 - 03

சுட்டெண் : ……………  தமிழ் (T–72)  நேரம்:3.00 மணித்தியாலம்

பகுதி - II

**அறிவுறுத்தல்கள்**: பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக

**01) ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையை தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

**01.** பின்வருவனவற்றுள் மேல் முன்னுயிர் நெடில்
1. ஊ 2. ஏ 3. ஓ 4. ஔ 5. ஈ
(………)

**02.** மெய்யோடு உகரம் சேரும்போது பின்வருவனவற்றுள் வேறுபாடாக எழுதப்படும் மெய்
1. டு 2. பு 3. ழு 4. ளு 5. ரு
(………)

**03.** பின்வருவனவற்றுள் “எகரம்” வேறுபட்டு ஒலிக்கும் சொல்
1. எளிமை 2. தெளிவு 3. மென்மை 4. பெண்மை 5. வெட்சி
(………)

**04.** பின்வருவனவற்றுள் வினைத்தொகையாக வராதது
1. விடுகதை 2. அலைகடல் 3. விடுகணை 4. ஊறுகாய் 5. ஒலிகடல்
(………)

**05.** பின்வருவனவற்றுள் தொகை மொழியாக வரத்தக்கது
1. தேர்கள் 2. ஊர்கள் 3. கனிகள் 4. மரங்கள் 5. பழங்கள்
(………)

**06.** அவன் எளிமையான பேச்சு - இதில் வந்துள்ள **எளிமையான** என்பது
1. வினைமுற்று 2. பண்புப் பெயர் 3. வினையடை 4. தொழிற்பெயர் 5. பெயரடை
(………)

**07.** **ஆன்** என்ற விகுதி பெற்று பெயரடையாக வர முடியாத சொல்
1. சரி 2. விறுவிறுப்பு 3. அழகிய 4. வேகம் 5. கலகலப்பு
(………)

**08.** கலை நூல்களை யோதியுணர்ந்த கல்விமான் இப்புத்துருவங்களைத் தெளிவாக நோக்கி மனத்துக்கண் அதை யமைத்துக் கொள்கிறான். இதில் வந்துள்ள **ஆக்கப்பெயர்**
1. கலைநூல் 2. கல்விமான் 3. புத்துருவம் 4. மனத்துக்கண் 5. ஓதியுணர்
(………)

**09.** தல், அல் என்ற இரு விகுதிகளையும் பெற்று தொழிற்பெயராக வரமுடியாத வினையடி
1. ஓடு  2. வா  3. பாய்  4. சேர்  5. உண்

(………)

**10.** பின்வருவனவற்றுள் தன்னோடு தான் மயங்கி வரும் மூக்கொலி
1. வெந்நீர்  2. அக்கினி  3. சித்திரம்  4. வெள்ளி  5. இட்டிலி

(………)

**11.** பின்வருவனவற்றுள் படர்க்கை தற்சுட்டுப் பெயர் இடம்பெறாத வாக்கியம்
1. தங்கள் முகாம்களுக்கு வீரர்கள் சென்றனர்.
2. தங்கள் வருகைக்காக காத்து நின்றோம்
3. மாணவர்கள் தங்கள் வகுப்பறையில் இருந்தனர்.
4. தங்கள் நாட்டை மக்கள் நேசிக்க வேண்டும்.
5. நோயாளர்கள் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும்.

(………)

**12.** **'வாழ்'** என்ற வினையடியிலிருந்து பிறக்கும் "செய்ய" வினையெச்சம்
1. வாழ்ந்து  2. வாழ்ந்தால்  3. வாழ  4. வாழ்ந்த  5. வாழும்

(………)

**13.** பின்வருவனவற்றுள் "ஆல்" வேற்றுமை உருவாக வருவது
1. வந்ததால்  2. வந்தால்  3. வந்திருந்தால்  4. வந்திருக்காவிட்டால்
5. வரமுடியாவிட்டால்  (………)

**14.** விளி வேற்றுமை தொடர்பாக தவறான கூற்று
1. முன்னிலையில் உள்ளவரை அழைப்பது.
2. படர்க்கைக்குரியவரை அழைப்பது
3. படர்க்கைச் சொல் முன்னிலை சொல்லாகவிருப்பது
4. தன்மை பெயர்கள் விளிவேற்றுமை ஏற்காது
5. முன்னிலைப் பெயர்கள் விளிவேற்றுமை ஏற்கும்

(………)

**15.** பின்வருவனவற்றில் புறப்புணர்ச்சி இடம்பெற்றுள்ள சொல்
1. எங்கள் ஊர்  2. தொலைக்காட்சி  3. புகைவண்டி  4. வானொலி
5. பல்கலைக்கழகம்  (………)

**16.** பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமற்ற இடைச்சொற் பயன்பாடு கொண்ட வாக்கியம்
1. நீ இதனைச் செய்ய வேண்டும் அல்லது நான் செய்ய வேண்டும்
2. நீ அல்லது நான் இதனைச் செய்ய வேண்டும்
3. நீயாயினும் நானாயினும் இதனைச் செய்ய வேண்டும்
4. நீ இதனைச் செய்ய வேண்டும் இல்லாவிட்டால் நான் செய்ய வேண்டும்
5. நீயோ அல்லது நானோ இதனைச் செய்ய வேண்டும்

(………)

**17.** எல்லாமறியும் அறிவு கடவுளுக்குத்தான் உண்டு. இங்கு "தான்" எனும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்
1. சிறப்புப் பொருள்  2. பிரிநிலை  3. மிகுதிப்பொருள்
4. தேற்றப்பொருள்  5. முற்றுப்பொருள்  (………)

**18.** புணர்ச்சியின் போது ணகரம் திரிந்து கருத்துணர்த்த வேண்டிய புணர்ச்சி
1. மண் + குடம்  2. காண் + சி  3. மண் + பாத்திரம்  4. மண் + சட்டி
5. வெண் + தாமரை  (………)

19. கொரோனா -19 வைரசிற்கு மருந்து கண்டறியப்படும் என்றால் எல்லோருக்கும் மகிழ்ச்சிதான் - இந்த வாக்கியம்

1. தனி வாக்கியம்  2. கூற்று வாக்கியம்  3. கலப்பு வாக்கியம்
4. கூட்டு வாக்கியம்  5. துணை நிலைத் தொடர்

(………)

20. தொடரொலி என குறிப்பிடப்படும் மெய்

1. ல்  2. ள்  3. ழ்  4. ர்  5. ட்

(………)

(20 புள்ளிகள்)

02) (அ) **பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த அறிஞர் கதே போன்றவர்கள் எல்லாம் நெப்போலியனின் மனவளம் பற்றியும், புத்திக் கூர்மையைப் பற்றியும் வியந்துபோற்றியுள்ளார்கள்.

"உலகம் இதுவரை உற்பத்தி செய்ததிலேயே நெப்போலியனின் மனம் தான் தலைசிறந்தது" என்பது கதேயின் கணிப்பு. "இவ்வளவு கட்டுக்கோப்பாக இயங்கும் மூளை இதுவரையில் யாருக்கும் இருந்ததே இல்லை" என்று நெப்போலியனுக்கு நெருக்கமாக இருந்தவர்கள் எல்லாம் பிரமித்திருக்கிறார்கள், "விஞ்ஞானியாக உயர வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகள் என்னை திசை திருப்பிவிட்டன. என்று ஒரு சமயத்தில் லாப்ளாஸிடம் நெப்போலியன் வருத்தப்பட்டு சொல்லியிருக்கிறார். மனதின் வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் செயல் வேகம் கொண்டிருந்தாலும் ராஜதந்திரத்துடனும் மதிநுட்பத்துடனும் செயல்படுவது அவருக்குக் கைவந்த கலை ஒவ்வொரு கட்ட முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்டுத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டதை அவர் வாழ்க்கை முழுவதும் நாம் காணலாம்.

போர்க்களத்தில் பிறந்த அவருக்கு போர்க்களமே வாழ்க்கையாகி விட்டதாலோ என்னவோ மிகக் கூர்மையான வெகு நுணுக்கமான உணர்வு கொண்டிருந்தார். அவ்வளவு சென்ஸிடிவாக இருந்ததால் அதன் பாதிப்பையும் கூட எதிர்கொண்டார். மிக மெல்லிய ஓசைகூட அவருக்குப் பலமாகக்கேட்கும். தொலைவில் கிளம்பும் வாசனையைக் கூட அவர் மூக்கு மோப்பம் பிடித்துவிடும்.

அவர் கண்கள் சொல்லவே வேண்டாம்…..! எதையும் எவரையும் துளைந்தெடுத்துவிடும். புதிது புதிதாய் தெரிந்து கொள்வதில் ஆர்வம் கொண்ட அவர் ஆயிரக்கணக்கான கேள்விகளை எழுப்புவார். நூற்றுக்கணக்கான புத்தகங்களைப் படிப்பார். வரைபடங்களையும், வரலாறுகளையும் உற்றுநோக்குவார். தொழிற்சாலைகளுக்கு விஜயம் செய்வார். பலதரப்பட்ட விசயங்களில் ஈடுபாடு கொண்ட நெப்போலியன் அவை சம்பந்தமான அனைத்து விடயங்களையும் அறிந்து வைத்திருந்தார்.

தேசங்களையும் பல நூற்றாண்டு கால நிகழ்வுகளையும் துல்லியமாகத் தெரிந்து வைத்திருந்தார். தனது உயர்வுக்கும் தன் இலட்சியத்துக்கும் தேவையானதை மட்டுமே நினைவில் வைத்துக் கொண்டு தேவையில்லாததை மறந்து விடுவார். சிந்திப்பதிலும், செயல்படுவதிலும் தெளிவாக இருந்தவர். (13புள்ளிகள்)

**(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அறிவுத்தேடல் முயற்சி எக்காரணம் பற்றியேனும் வேற்றுமொழியைக் கருவியாகக் கொள்ளும் போது, குறித்த மக்கட்கூட்டத்தினரின் தாய் மொழியிலே கலைச்சொல் ஆக்கம் தேக்கம் அடைகிறது.

வேற்று நாட்டாரின் ஆட்சி மேலோங்கி இருந்த குடியேற்ற ஆதிக்க காலத்தில் - அதாவது கொலனி ஆதிக்க கட்டத்திலே மொழிகள் ஆட்சியுரிமை பெறுவதும், கல்வி மொழியாவதும் வரலாற்று நிகழ்வுகளாய் இருந்து வந்துள்ளன. இந்த வகையிலே தான் தமிழ் மொழியிலும் கலைச்சொல் ஆக்க முயற்சிகள் இடம்பெறாது தடைப்பட்டன. ஆட்சி மொழியாகிய ஆங்கிலத்தையே நெடுங்காலமாகத் தமிழ் மக்கள் தமது கல்வி மொழியாக வைத்திருக்க வேண்டி ஏற்பட்டது. இதனால் நிகழ்கால வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக் கூடிய அளவிலே மொழியின் சொல்வளம் செம்மையாகப் பெருகவில்லை.

எனினும் இலங்கையில் 1950 ஆம் ஆண்டைத் தொடர்ந்து தமிழும் கல்வி மொழியாதல் வேண்டும் என்ற எண்ணம் எழுச்சி பெற்றது. அதனால் கலைச்சொல் தொகுதிகள் பல இயற்றப்பட்டன. இரசாயனம், மெய்யியல், கணிதம், புவியியல், வரலாறு முதலான துறைகளில் எல்லாம் நூல்கள் பல மொழிபெயர்க்கப்பட்டன. தமிழகத்தைப் பொறுத்தவரை மிகுந்த தயக்கத்துடன் தொடரப்பட்ட மொழிபெயர்ப்பு முயற்சிகள் காலகதியிலே மாநில ஆட்சிகள் தலையெடுத்த பின்னரும் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டன. அறிவுத்துறை நூல்களைத் தமிழாக்கம் செய்வதும் புதியனவாக இயற்றுதலும் ஆகிய முயற்சிகள் முடுக்கி விடப்பட்டன. அத்துடன் நிர்வாகத் துறையிலும் தமிழின் பயன்பாடு மெல்ல மெல்ல மிகுதியாகிக் கொண்டு வந்தது.

என்றாலும் இலங்கையைப் பொறுத்தவரையில் எழுபதுகளின் இறுதிப்பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் தேசிய மொழிகளையும் பண்பாட்டையும் ஊக்கி வளர்ப்பதில் அதிகம் ஆர்வம் காட்டாத நிலைக்கு ஏதுவாயின. இதன் பேறாகவும் மிக மூர்க்கமாக மூண்ட இனப்பூசலின் விளைவாகவும் அறிவுத்துறைகளிலே தமிழ்மொழி பெற்று வந்த முன்னேற்றத்தின் வேகம் பெரிதும் குன்றலாயிற்று.

(i) தாய் மொழியில் கலைச்சொல் ஆக்கம் எவ்வாறு உருவாகியது?
(ii) தமிழ் மொழியில் கலைச்சொல் ஆக்க முயற்சிகள் தடைப்பட்டமைக்கான காரணம் யாது?
(iii) நிகழ்கால அறிவியல் வளர்ச்சிக்கேற்ற வகையில் தமிழில் சொல்வளம் பெருகாமைக்கான காரணம் என்ன?
(iv) இலங்கையில் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் பின்னர் தமிழில் ஏற்பட்ட புதிய மாற்றங்கள் எவை?
(v) தமிழகத்தில் உருவான மொழிபெயர்ப்பு முயற்சி பற்றி ஆசிரியரின் கருத்து யாது?
(vi) இலங்கையில் அறிவுத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் முடங்கியமைக்குரிய காரணம் எதுவென ஆசிரியர் குறிப்பிடுகின்றார்?

(12 புள்ளிகள்)
(13+12=25 புள்ளிகள்)

**03)** பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பினைத் தெரிந்து 300-350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) மானிட வாழ்வும் பண்பாடும்
(ஆ) வனவளத்தை பாதுகாப்போம்
(இ) வெளிநாட்டு வேலை வாய்ப்பின் விளைவுகள்
(ஈ) இலக்கியம் ஒரு கலை
(உ) சமத்துவமாய் வாழ் (25 புள்ளிகள்)

## பகுதி II

04) (அ) பத்துப் பாட்டு நூல்களை பொருள் அடிப்படையில் வகைப்படுத்துக.

(ஆ) பத்துப்பாட்டு இலக்கியங்கள் சுட்டும் முக்கிய பண்புகளை விளக்குக.

(இ) தமிழ் இலக்கிய வரலாற்றில் திருமுருகாற்றுப்படை பெறும் இடத்தினை மதிப்பிடுக?

(15 புள்ளிகள்)

05) (அ) சோழர் காலத்தில் எழுந்த காவியங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் பெரியபுராணத்தின் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக?

(ஆ) சோழர் கால பிரபந்த வளர்ச்சிக்கு முன்னைய காலங்கள் ஏதுவானதாக அமைந்திருந்தமையினை தெளிவுபடுத்துக.

(இ) பரணி அல்லது அந்தாதிப் பிரபந்தம் பற்றி கருத்துரை செய்க. (15 புள்ளிகள்)

06) (அ) ஒல்லாந்தர் காலம் சிற்றிலக்கிய காலம் என்பதன் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(ஆ) ஒல்லாந்தர் காலத்தில் கிறிஸ்தவர்கள் ஆற்றிய தமிழ்த் தொண்டினை விளக்குக.

(இ) ஒல்லாந்தர் காலத்தில் ''புராணம்'' என்னும் இலக்கிய வகை முக்கியத்துவம் பெற்றதனை விளக்குக?

(15 புள்ளிகள்)

07) பின்வருவோரில் யாரேனும் இருவர் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) கவிதைத் துறையில் மஹாகவி

(ஆ) நாடகத் துறையில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை

(இ) சிறுகதைத் துறையில் டொமினிக் ஜீவா

(ஈ) நாவல் துறையில் கே.டானியல் (15 புள்ளிகள்)

08) (அ) (i) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு விளக்குக.

''அநாதைகளாகவிருக்கும் முதியோர் இல்லங்களில் முதியோர்கள் கண்ணீரால் நாளும் பொழுதைக் கழிக்கின்றனர்''

(ii) பின்வரும் வாக்கியங்களை ''செய்ய'' எனும் வினையெச்ச வாய்ப்பாட்டினைப் பயன்படுத்தி இணைக்குக.

மாதவியைப் பிரிந்து கோவலன் வந்தான்.
கண்ணகி புன்னகை சிந்தினாள்.
இருவரும் அடைந்த இன்பத்தினை சொல்ல முடியுமா?

(iii) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி, வழுவற்ற வகையில் வாக்கியத்தை திருத்தி எழுதுக?

''தமிழ் மொழி சட்டத்தை அமுலாக்க அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்''

(iv) பின்வரும் வாக்கியங்களை வினையெச்ச விகுதி மூலம் கலப்பு வாக்கியம் ஆக்குக.
பாலன் நன்றாகப் படிப்பான்.
பாலன் பல்கலைக்கழகம் செல்வான்.

(v) ஒவ்வொரு ஆண்டில் உலகில் தலை சிறந்த உதைபந்தாட்ட வீரர் மெஸ்சி ஏழைக்கு உதவி வருகிறார். - இவ்வாக்கியத்தை பிழையற்ற விதத்தில் எழுதிக் காட்டுக.

(10 புள்ளிகள்)

(ஆ). பின்வருவனவற்றுள் யாதேனும் ஒன்றினைப் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

(i) இடைநிலை மெய்ம்மயக்கம்

(ii) பெயரடையும் பெயரெச்சமும்

(iii) உடைமை வேற்றுமை

(05 புள்ளிகள்)

(10+05=15 புள்ளிகள்)